**செய்தி வெளியீடு எண்: 02/09/2021** **நாள்: 02.09.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழா (Azadi ka Amrut Mahostav) மற்றும் சென்னை தினத்தைக் கொண்டாடிடும் வகையில் நடைபெற்ற “சென்னை பெற்ற வல்லமை” – (Chennai Got Talent) போட்டியின் வெற்றியாளர்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்**

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழா (Azadi ka Amrut Mahostav) மற்றும் சென்னை தினத்தை கொண்டாடிடும் வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சென்னையில் உள்ள இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் (CII) யங் இந்தியன்ஸ் உடன் இணைந்து சென்னையில் உள்ள பல்வேறு கலாசாரங்கள் மற்றும் திறமைகளைக் கொண்டாட “சென்னை பெற்ற வல்லமை” – (Chennai Got Talent) என்ற தலைப்பில் போட்டிகளை நடத்தியது.

“சென்னை காட் டேலண்ட்” மாபெரும் இறுதிப்போட்டி 22.08.2021 அன்று இணையவழியில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் மொத்தம் 100-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (02.09.2021) கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆர்.சபரிஷ், இரண்டாமிடம் பெற்ற கே.பிரித்திகா, மூன்றாமிடம் பெற்ற சுஷில் ஸ்ரீதரன் ஆகியோருக்கு வெகுமதி மற்றும் நற்சான்றிதழ்களையும், இறுதிப் போட்டியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகள் மற்றும் நற்சான்றிதழ்களையும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தனி மனித இடைவெளியைக் கடைப்பிடித்துப் பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**